நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 187/2017

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | கருப்பன் |
| கிராமம் | : | குரும்பனூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 68 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.40 PM

1. நான் தற்போது குரும்பனூரில் குடியிருக்கிறேன். நான் கிராம உதவியாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். எதிரியை தெரியும். அவர் போரமேட்டில் குடியிருக்கிறார். சுமார் 2017ம் வருடம் வருவாய் ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவர் என்னை போரமேட்டில் உள்ள எதிரி சின்னசாமி வீட்டிற்கு என்னை

அழைத்து சென்றார்.

2. வீட்டிற்குள் சென்று ஊசி, மாத்திரைகள் இருக்கிறதா என்று என்னை பார்க்க சொன்னார். நான் உள்ளே சென்று வீட்டிற்குள் இருந்த பேக் மற்றும் பீரோவை திறந்து பார்த்தேன்.அதில் எதுவும் இல்லை. பிறகு நாங்கள் அலுவலகத்திற்கு வந்துவிட்டோம். 3 மணிநேரம் கழித்து காவல் நிலையம் வரச்சொன்னார்கள். நான் சென்றேன். அங்கு போலீசார் என்னிடம்ஒரு கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்களை எனக்கு தெரியாது. ( **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ3ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழுங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. நான் 40 வருடமாக கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி சின்னசாமி குடியிருக்கும் பகுதி எங்களுடைய கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்டதுதான். அதனால் அவரை பல வருடமாக தெரியும். எதிரியின் வீடு வடக்கு பார்த்த அட்டைவீடு என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக காவல் துறையினர் வரச்சொன்னதன் பேரில் நான் வருவாய் ஆய்வாளருடன் நான் எதிரியின் வீட்டிற்கு சென்றேன்.

2. நான் 40 வருடமாக அதே கிராமத்தில் பணியாற்றி வந்தததால் அங்கு இருப்பவர்களை பற்றியும் அவர்கள் என்ன தொழில் செய்கிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். எதிரி ஹோமியோபதி டாக்டருக்கு படித்து இருப்பதாக சொன்னார்கள். அதனால் அந்த ஊர் மக்கள் எதிரியிடம் சிகிச்சை பெற்றார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நாங்கள் சென்றபோது எதிரி டாக்டர் அணிந்திருக்கும் ஸ்டதொஸ்கோப் அணிந்திருந்தாரா என்றால் இல்லை. போலீசாரை பார்த்ததும் எதிரி அங்கு இருந்து ஓட முயற்சி செய்தார்.போலீசார் அவரை பிடித்து கொண்டார்களா என்றால் இல்லை. போலீசார் விசாரித்தபோது முறையாக மருத்துவம் படிக்காமல் போலியான மருத்துவ சான்றிதழை வைத்து கொண்டு பொதுமக்களை ஏமாற்றி சிகிச்சை செய்து பணம் சம்பாரித்து வருவதாக ஆள்மாறாட்டம் செய்து சிகிச்சை அளித்து எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் இல்லை.

4. அவர் வீட்டிற்குள் இருந்து மருந்து , மாத்திரை மற்றும் இன்ஜக்சன் மற்றும் படிவம் 95ல் கைப்பற்றப்பட்ட 1 முதல் 10 வரையிலான மருத்து, மாத்திரை மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை போலீசார் வருவாய் ஆய்வாளர் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கைப்பற்றியதில்தான் நானும், வருவாய் ஆய்வாளரும் அதில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல.

5. எதிரி எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு படித்துள்ளேன். நிறைய வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன். அவ்வாறு சாட்சியம் அளிக்கும்போது அதில் உள்ள வழக்கின் விவரங்களை தெரிந்து கொண்டுதான் சாட்சியம் அளிப்பேன் என்றால் சரியல்ல. எதிரியை காப்பாற்ற வேண்டி தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.01 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**